# மணவாள மாமுனிகள்
# திருநாள் பாட்டு

### பொன்னடிக்கால் ஜீயர் (ஒன்னான வானமாமலை ஜீயர்) அருளிச் செய்தது

செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்திடு நாள்
சீர் உலகாரியர் செய்தருள் நற்கலை தேசு பொலிந்திடு நாள்
மந்த மதிப் புவி மானிடர் தங்களை வானில் உயர்த்திடு நாள்
மாசறு ஞானியர் சேர் எதிராசர் தம் வாழ்வு முளைத்திடு நாள்
கந்த மலர்ப் பொழில் சூழ் குருகாதிபன் கலைகள் விளங்கிடு நாள்
காரமர் மேனி அரங்க நகர்க்கிறை கண்கள் களித்திடு நாள்
அந்தமில் சீர் மணவாள முனிப் பரன் அவதாரம் செய்திடு நாள்
அழகு திகழ்ந்திடும் ஐப்பசியில் திருமூலம் அதெனு நாளே

### பரவஸ்து பட்டர் பிரான் ஜீயர் அருளிச் செய்தது

சதுமறையின் உபநிடதவை ஆகிய நாரணன் தாளிணை வணங்க வரு நாள்
சகல குண ஸம்பன்னர் எதிராசர் பாஷியமும் சற்குறவர் போற்ற வரு நாள்
மதி தவழும் மணிமாட மதிள் அரங்கேசனார் மாறன் உரை கேட்க வரு நாள்
வரை ஆழி புரி சங்கம் ஆரியர்கள் தோளிசைய வைத்தவர் இறைஞ்ச வரு நாள்
பதிகள் நூற்றெட்டிலும் ஶ்ரீசைல மந்திரம் பாகவதர் போற்ற வரு நாள்
பல்லாண்டு செப்பின பின் இன்னும் ஒரு நூற்றாண்டு பகருபவர் இறைஞ்ச வரு நாள்
அதி மதுரகவி எதிராசர் குருகை வண்சடகோபர் தாளிணைகள் அணியுமவர் நாள்
அழகு திகழ்ந்திடும் ஐப்பசியில் திருமூலம் அதெனு நாளே

---